
பக்கங்கள்:-20

# காலை முரசு

## பாரதியை இழந்து நிற்கும் தமிழ்ப் பத்திரிகை உலகம்

03



முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 01 | வியாழக்கிழமை | 13.02.2025 | அதிர்வு 195



# அநுர அரசே தமிழருக்கு நீதி வேண்டும்

**தையிட்டியில் நேற்று விகாரைக்கு எதிரான போராட்டத்தில் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து**

(எஸ்.நிதர்ஷன்)

தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு நீதியை வழங்க இந்த அரசு முன்வரவேண்டும் எனத் தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - தையிட்டியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி நேற்று நடைபெற்ற போராட்டத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06

# சட்டவிரோத விகாரை அகற்றப்படும் வரை நாம் ஓயாது தொடர்ந்தும் போராடுவோம்!



**கஜேந்திரகுமார் எம்.பி. சூளுரை**

(எஸ்.நிதர்ஷன்)

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை அகற்றப்படும் வரையில் நாம் ஓயாது தொடர்ந்தும் போராடுவோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தையிட்டியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு 02




இன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கு மீண்டும் எடுக்கப்பட இருக்கின்றது.

இணக்கத் தீர்வுக்கான வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்காகவே வழக்கு இன்று எடுக்கப்படுவதாக திகதி குறிக்கப்பட்டுள்ளது. ஆகையினால் இன்று வழக்கு விசாரணை நாள் அல்ல.

இணக்கமாக – உடன்பாட்டின் அடிப்படையில் – சமரசத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு ஏதும் இருக்கின்றதா என்பது குறித்து நீதிமன்றம் இன்று பரிசீலிக்கும். அவ்வளவே.

ஆனாலும் இந்த வழக்கையொட்டி இன்னொரு விவகாரமும் தொங்கிக்கொண்டு இருக்கின்றது.

அது இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த வழக்கையொட்டி நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு ஒன்றை 'புதிய சுதந்திரன்' என்ற பெயரில் இணையப் பத்திரிகை ஒன்றை வெளியிடும் அகிலன் முத்துக்குமாரசுவாமிக்கு எதிராக சுமத்தி இருந்தார். அது பற்றிய 06

# சட்ட விரோத விகாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தையிட்டியில் மக்களின் காணிகளுக்குள் கட்டப்பட்ட விகாரையை அகற்றி தமது காணிகளை மீட்டுத் தருமாறு காணி உரிமையாளர்கள் எங்களிடம் கேட்டிருந்தனர்.

அதற்கமைய நாங்கள தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்து வந்திருந்தோம். இதற்கமைய இந்த விகாரை அகற்றப்படும் வரையில் நாம் ஓயாது தொடர்ந்தும் போராடுவோம்.

இங்கு சட்டங்கள், விதிமுறைகளை மீறி இந்த விகாரையை இராணுவம் கட்டி முடித்துள்ளது. ஆனாலும், இந்த விகாரை சட்டபூர்வமானது அல்ல என்பதை விகாரைக்கென்று வருகின்ற அப்பாவி சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த விகாரை கட்டப்பட்டதாலே இங்கு புத்தர் என்ற பெயரில் நடக்கின்ற அநியாயங்களை அப்பாவி சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த விகாரையைத் தொடர்ந்து வைத்திருப்பதில் அர்த்தம் இல்லாமல் போகும்.

போராட்டங்கள் தொடர்ந்து பலமாக அமைகின்றபோதுதான் தீர்வை அடையலாம். இதற்கமைய பலரும் இன்றைக்கு வந்து இருந்தனர். அனைவரதும் ஆதரவினால்தான் இந்தப் போராட்டம் வெற்றியளித்து இருக்கின்றது.

இதேவேளை, இன்னுமொரு விடயத்தையும் நாங்கள் சொல்ல வேண்டியுள்ளது. அதாவது நாங்கள் இனவாதியோ மதவாதியோ அல்ல. ஆனால், இங்கே இருக்கக்கூடிய மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அடாத்தாக கட்டப்பட்ட விகாரையை எதிர்த்துப் போராடுகின்றோம்.

தமிழ் மக்களின் உரிமைக்கு எதிரான செயற்பாடுகள் எதுவானாலும் நாங்கள் எதிர்ப்போம். இன்றைய போராட்டத்தை விடவும் அடுத்த பௌர்ணமிக்கு அதிகளவில் மக்கள் திரள வேண்டும்.

மேலும் உரிமைக்கான எமது இந்தப் போராட்டம் இன்னும் இன்னும் பலமடையும். இதற்குப் பின்னால் ஒட்டுமொத்த இனமும் அணிதிரளும். மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

கட்சி பேதங்களுக்கப்பால் ஒன்றிணைந்து வந்திருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக சட்டத்தின் ஆட்சியைப் பற்றிக் கதைக்கும் அரசுதான் ஆட்சியில் இருக்கின்றது.

குறிப்பாக சட்டத்தை மீறி எப்படி ஒரு பொதுமகன் கட்டடம் கட்டினால் அது உடனடியாக அகற்றப்படுகின்றதோ அதே போன்றே சட்டவிரோத விகாரையையும் அகற்ற வேண்டும்.

இது அகற்றபடாவிட்டால் ஒவ்வொரு இடத்திலும் நடக்கும் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மக்களின் காணி உரிமையில் இந்த அரசு கைவைக்கின்றது என்றால் ஒவ்வொரு தமிழனின் தலையிலும் கைவைப்பதாக அமையும்.” – என்றார்.





# பண்பு நிறைந்த பத்திரிகையாளன் பாரதியை இழந்து நிற்கும் தமிழ்ப் பத்திரிகை உலகம்



வீரகத்தி
தனபாலசிங்கம்

இலங்கை பத்திரிகை நிறுவனமும் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இணைந்து மவுண்ட்லவினியா ஹோட்டலில் ஜனவரி 7 ஆம் திகதி இரவு நடத்திய “சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுகள்“ வழங்கும் வனப்புமிகு விழாவில் இறுதியாக நான் பாரதியைச் சந்தித்தேன். நீண்ட நேரமாக அவருடன் பேசி, “மீண்டும் சந்திப்போம்“ என்று கூறி இருவரும் விடை பெற்றுக் கொண்டோம். ஆனால், அதற்கு பிறகு ஒரு மாதமும் இரு நாள்களும் கடந்த நிலையில் கடந்த ஞாயிறன்று பாரதி எம்மிடமிருந்து நிரந்தரமாகவே விடை பெற்ற துயர்நிறைந்த செய்தி என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

கடந்த சில வாரங்களாக பாரதி சுகவீனமுற்று வைத்தியசாலையால் சிகிச்சை பெற்று வந்தார் என்ற போதிலும், அவர் விரைவில் சுகமடைந்து விடுவார், அவரைச் சென்று பார்க்கலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்தோம். உண்மையில், அவர் எம்மத்தியில் இன்று இல்லை என்பதை நம்புவதற்கு மனம் மறுக்கிறது. பாரதியின் மறைவு எம்மிடமிருந்து பண்பும் ஆற்றலும் நிறைந்த ஒரு சிறந்த பத்திரிகையாளனை அபகரித்துச் சென்று விட்டது.

பாரதி ஒரு சிறந்த பத்திரிகையாளன் என்பதற்கு அப்பால் ஒரு சிறந்த மனிதநேயன். அரசியலைப் போன்றே போட்டியும் சூழ்ச்சியும் நிறைந்ததாக மாறிவிட்ட ஊடகத்துறையில் பாரதியைப் போன்று முரண்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சகலருடனும் இணக்கப் போக்குடன் ஊடாட்டங்களைச் செய்யும் ஒரு பத்திரிகையாளனை இனிமேல் காணமுடியுமா என்று மனம் ஏங்குகிறது. மற்றவர்களுக்கு தீங்கு செய்வதை கனவிலும் கூட நினைத்துப் பார்த்திருக்காத ஒரு பிறவி பாரதி.

என்னைப் பொறுத்தவரை, பத்திரிகைத்துறைச் சகபாடி ஒருவர் என்பதற்கு அப்பால் என்னை நன்கு புரிந்து கொண்டு, நான் இழைத்திருக்கக்கூடிய தவறுகளையும் கூட பொருட்படுத்தாமல் என்னுடன் நீண்டகாலம் பழகிய நெருங்கிய நண்பனை இழந்து நிற்கிறேன். பாரதிக்கும் எனக்கும் இடையிலான ஊடாட்டம் அவர் 1990 களின் முற்பகுதியில் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டதுடன் தொடங்கியது. எங்களுக்கு இடையிலான நெருக்கத்துக்கு 35 வயது.

கொழும்பில் இருந்து பணியாற்றிய எங்களைப் போன்றவர்களைப் போலன்றி, பாரதி பத்திரிகைத் துறையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வளர்ந்தவர். ஆயுமேந்திய தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் தோற்றம் பெறத்தொடங்கிய நாள்களில் அவரின் பத்திரிகைத் துறைப் பிரவேசம் இடம்பெற்றது. முதலில் 1980 களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஈழமுரசு, முரசொலி பத்திரிகைகளில் பணியாற்றிய பாரதி இந்திய அமைதி காக்கும் படை வடக்கு, கிழக்கில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் விபத்தொன்றில் சிக்கிய பின்னரே வீரகேசரியில் இணைந்துகொணடார்.

பாரதியின் பத்திரிகைத்துறை வாழ்வு உள்நாட்டுப்போர் நீடித்த மூன்று தசாப்தங்களையும் போர் முடிவுக்கு வந்ததற்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களையும் உள்ளடக்கியதாகும். அதன் காரணமாக அவர் இயல்பாகவே தமிழ்த் தேசியவாத அரசியல் கோட்பாடுகளில் நிறைந்த ஈடுபாடு கொண்டவராக, தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளையும் மனக்குறைகளையும் பற்றுறுதியுடன் நியாயப்படுத்துவதற்கு தனது எழுத்தை அர்ப்பணித்தவராக வாழ்ந்தார்.

அதன் விளைவாக சிறந்த ஒரு அரசியல் விமர்சகராகவும் அவரால் விளங்க முடிந்தது. பாரதி வீரகேசரியில் இணைந்த ஆரம்ப நாள்களிலேயே தேசிய இனப் பிரச்சினை தொடர்பிலான சில ஆய்வு முயற்சிகளுக்கு முகாமைத்துவம் அவரைப் பயன்படுத்தியதை நான் நன்கு அறிவேன். அந்த ஆய்வுகளை ஒரு நூலாக்கும் முயற்சியும் கூட மேற்கொள்ளப்பட்டது. பாரதி அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து நிறையவே எழுதியிருக்கிறார்.

பத்திரிகையாளர்களின் உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளிலும் தீவிரமான ஈடுபாடு கொண்டவராக விளங்கிய பாரதி பல தடவைகள் இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் தலைவராக பணியாற்றினார்.

தினக்குரல் பத்திரிகை 1997 ஏப்ரிலில் தொடங்கப்பட்டபோது அதன் முதல் செய்தி ஆசிரியராக நான் இணைந்து கொண்டேன். என்னுடன் முதலில் கூட வந்தவர்கள் பாரதியும் சீவகனுமேயாவர். புதிய பத்திரிகையில் இணைவதில் உங்களுக்கு தயக்கம் எதுவும் இல்லையா என்று நான் இருவரையும் கேட்டபோது ”நீங்கள் போகிறீர்கள்...... எங்களுக்கு என்ன தயக்கம்?” என்று இருவரும் கூறியது இன்றும் என் காதில் எதிரொலிக்கிறது. அந்தளவுக்கு என்மீது பாரதி வைத்திருந்த நம்பிக்கை உணர்வு என்னை நெகிழ வைத்தது. இறுதிவரை என்னுடனான அந்த நெருக்கத்தை அவர் பேணினார்.

தினக்குரலின் பிரதம ஆசிரியராக 2004 ஏப்ரிலில் என்னை பொறுப்பேற்குமாறு முகாமைத்

தொடர்ச்சி ▼

# பண்பு நிறைந்த பத்திரிகையாளன் பாரதியை இழந்து நிற்கும் தமிழ்ப் பத்திரிகை உலகம்

**தொடர்ச்சி ▲**

துவம் கேட்டபோது அவர்களிடம் நான் ஒரு கோரிக்கையை முன்வைத்தேன். பாரதியை ஞாயிறு தினக்குரலின் பொறுப்பாசிரியராக நியமிப்பதாக இருந்தால் மாத்திரமே நான் பிரதம ஆசிரியராக பொறுப்பேற்பேன் என்று கூறினேன். பாரதி போன்ற அனுபவமும் ஆற்றலும் கொண்ட ஒருவரை அந்த பொறுப்பில் அமர்த்தினால் எனது பணிக்கு உறுதுணையாக இருக்கும் என்று நான் திடமாக நம்பினேன். முகாமைத்துவமும் எனது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு பாரதியை ஞாயிறு தினக்குரலுக்கு பொறுப்பாக நியமித்தது. வாரப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு பாரதியின் பங்களிப்பு மகத்தானது.

செய்திகளைக் கையாளுவதை விடவும் வாரப்பத்திரிகைக்கு உரிய சிறப்பு அம்ச விடயதானங்களைக் கையாளுவதில் பாரதியின் ஆற்றல் அபாரமானது என்பதை அவர் தனது பணியின் மூலம் நிரூபித்தார். கலை, இலக்கியத்துறை



சார்ந்தவர்களை ஞாயிறு தினக்குரலின் பக்கம் கவர்ந்ததில் பாரதியின் பங்களிப்பு முக்கியமானது.

தினக்குரலின் முகாமைத்துவத்தில் 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட மாற்றத்தை தொடர்ந்து நாமெல்லோரும் வீரகேசரி காரியாலயத்தில் பணியாற்ற வேண்டியிருந்தது. பாரதியின் திறமையைக் கண்ட வீரகேசரி முகாமைத்துவம் பாரதியை தங்களுக்காக பயன்படுத்துவதில் நாட்டம் காட்டியதை நான் நன்கு அறிவேன். நவீன தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்களுடனும் அவர் தன்னை எளிதாகவே பரிச்சயமாக்கிக் கொண்டார். பாரதி ஓய்வபெற்று யாழ்ப்பாணம் திரும்பிய பிறகு அங்குள்ள சில ஊடகங்களில் பணியாற்றினார். ஆனால், இறுதியில் வீரகேசரி நிறுவனம் அதன் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் பொறுப்பாசிரியராக நியமிப்பதற்கு ஒருவரை தேடியபோது பாரதியை அதற்கு பொருத்தமானவராக அடை

யாளம் கண்டு நியமித்தது.

அந்த நியமனம் பாரதியின் வீரகேசரிக்கான மீள்வருகையாக அமைந்தது. ஆனால், அதில் சில மாதங்களே பணியாற்றிய நிலையில் அவர் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். திடீரென்று தாக்கிய பக்கவாத நோய் சில வாரங்களில் அவரைப் பலியெடுத்துவிட்டது.

ஊடகத்துறையில் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் பல மட்டங்களில் பாரதிக்கு பெருமளவில் நண்பர்கள். அபிமானிகள் இருந்தார்கள். வெறுமனே அலுவலகத்திற்குள் தன்னை முடக்கிக் கொண்ட ஒரு பத்திகையாளராக இல்லாமல் வெளித் தொடர்புகளை நிறையவே அவர் ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாக புலம்பெயர் தமிழ்ச சமூகத்திலும் அவர் நன்கு அறியப்பட்டவராக விளங்கினார். பல வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொண்டு தனது அனுபவத்தை வளப்படுத்திக் கொண்டார். புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் இயங்கும் சில ஊடகங்களுக்காக பல தடவைகள் என்னை நேர்காணல் செய்து என்னையும் அந்த சமூகத்துக்கு அறிமுகம் செய்தார்.

அவரது மறைவை ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று கூறுவதை விடவும் நிச்சயமாக ஈடுசெய்யப்பட வேண்டிய இழப்பு என்றே நான் கூறுவேன். ஏனென்றால், பாரதியைப் போன்ற பரந்த அனுபவமும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் கொண்ட பத்திரிகையாளர் தமிழ் ஊடகத்துறைக்கு வேண்டும்.

எனது தனிப்பட்ட குறிப்பை இந்த சந்தர்ப்பத்தில் கூறவிரும்புகிறேன்.

காலஞ்சென்ற முதுபெரும் இலக்கியவாதி டொமினிக் ஜீவா ஒரு தடவை என்னை அணுகி தனது மல்லிகை சஞ்சிகையில் அட்டைப் பட பிரமுகராக என்னை பதிவு செய்ய விரும்புவதாக கூறினார். "அதற்கு யாரிடம் உங்களைப் பற்றி ஒரு கட்டுரையை வாங்கலாம்?" என்று அவர் என்னையே கேட்டார்.

"அவுஸ்திரேலியாவில் வாழும் எனது நெருங்கிய நண்பன் முருகபூபதி அல்லது பாரதியிடம் என்னைப் பற்றிய கட்டுரையை வாங்கினால் மாத்திரமே எனது புகைப்படத்தை தருவேன்." என்று நான் ஜீவாவிடம் திட்டவட்டமாக கூறிவிட்டேன்.

அவர் உடனே தினக்குரல் அலுவலகத்தில் இருந்த பாரதியின் அறைக்குச் சென்று அவரிடம் விடயத்தை சொன்னார் என அறிந்தேன். அடுத்த மல்லிகை இதழ் எனது படத்தைத் தாங்கி வந்திருந்தது. ஜீவாவே அதை கொண்டு வந்து தந்தார். உள்ளே பாரதி என்னைப் பற்றி எழுதிய கட்டுரை. அதை வாசித்த பிறகுதான் பாரதி என்னைப் பற்றி எத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கிறார் என்பதையும் என்மீது எவ்வளவு அன்பை வைத்திருக்கிறார் என்பதையும் நான் புரிந்து கொண்டேன்.

பாரதி தனது அபிப்பாராயங்களை பெரிதாக வெளியில் பேசாத ஒரு பிறவி. ஆனால், நிதானமாக, ஆரவாரமின்றி சகலவற்றையும் அவதானித்து செயற்பட்ட ஒருவர். பரபரப்புக் காட்டுவதில் நம்பிக்கையில்லாத ஒருவர். ஒப்படைக்கப்பட்ட பொறுப்பைக் கச்சிதமாகச் செய்வதில் கண்ணாயிருப்பார். வீணான அபிப்பிராயங்கள் குறித்து அக்கறை காட்டமாட்டார்.

அண்மைக்காலமாக நானும் சுகவீனமுற்று சத்திரசிகிச்சைக்கு பிறகு குணமடைந்திருக்கிறேன். பெரும்பாலும் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் என்னை கடந்த மூன்று வருடங்களாக பாரதி வாரம் ஒரு முறை யாழ்ப்பாணத்தில் இருந்து தொலைபேசியில் தொடர்புகொண்டு சுகம் விசாரிக்கவும் நாட்டு நடப்புகளைப் பேசவும் தவறுவதில்லை. பத்திரிகைகளுக்கு எழுதும் அரசியல் கட்டுரைகளைப் பற்றி காய்தல் உவத்தல் இன்றி கருத்துக்களைக் கூறுவார். மனமுவந்து நான் பேசும் பாரதியிடம் இருந்து இனிமேல் தொலைபேசி அழைப்பு வராது.

பாரதியின் மனைவி தேவகி எனது ஊரான வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்தவர். அதனால் பாரதி எம்மவர் என்று மேலதிக உறவு கொண்டாடும் உரிமையும் எனக்கு இருப்பதாக நினைத்துக் கொள்வேன். மனைவிக்கும், மகன் பார்த்திபனுக்கும் சகோதரிக்கும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

" பாரதி..... உனக்கு அஞ்சலிக் குறிப்பை எழுதும் துரதிர்ஷ்டம் எனக்கு வரும் என்று நான் நினைத்ததில்லை. நீ முந்தி விட்டாய். சென்றுவா...!"



# வாசனை திரவிய ஏற்றுமதியில் கடந்த ஆண்டு வரலாற்று சாதனை

2024 ஆம் ஆண்டில் விவசாய ஏற்றுமதி மூலம் 89,217 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணி வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரலாற்றில் வாசனை திரவியங்கள் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த அதிக வருமானம் இது என அதன் அபிவிருத்திப் பணிப்பாளர் உபுல் ரணவீர தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 44,262 மெட்ரிக் தொன் வாசனை திரவியங்கள் ஏற்றுமதி செய்ததன் மூலம் இலங்கையின் அதிகபட்ச வருமானமாக , 89,217 மில்லியன் ரூபா பெறப்பட்டது.

இதன்படி,மிளகு ஏற்றுமதியிலிருந்து அதிகபட்ச வருமானமாக 51,524 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டது.

இந்தியாவிற்கு 23,932 மெட்ரிக் டன்கள் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்ட மூலம் 47,436 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டதாக, மீதமுள்ள வருமானம் ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளுக்கு மிளகு ஏற்றுமதி செய்வதன் மூலம் பெறப்பட்டுள்ளதாகவும் ஏற்றுமதி விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

8,852 மெட்ரிக் டன் பாக்கு ஏற்றுமதி மூலம் 11,598 மில்லியன் ரூபா வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2,317 மெட்ரிக் டன் ஜாதிக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டு, 4,648 மில்லியன் ரூபா அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது.

மேலும், மஞ்சள், இஞ்சி, கோப்பி , ஏலக்காய், கிராம்பு, வெண்ணிலா, வெற்றிலை, சோளம், கோக்கோ உள்ளிட்ட பிற பயிர்களின் ஏற்றுமதியிலிருந்து 20,526 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

# உர மானியம் பெற்றால் அரசாங்கத்துக்கு அறுவடையில் ஒரு பங்கு வழங்குங்கள்

## அமைச்சர் கே. டி. லால் காந்த கோரிக்கை



விவசாயிகள் உர மானியங்களைப் பெற்றால், அவர்கள் தங்கள் அறுவடையில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தும் ஒரு சட்டத்தை வகுக்க முன்மொழியப்பட்டுள்ளதாக, அமைச்சர் கே. டி. லால் காந்த கூறியுள்ளார்.

அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை அறிவித்து ஒரு வாரம் கடந்துள்ள போதிலும், அரசாங்க நெல் களஞ்சிய சாலைகளுக்கு நெல் விற்பனை இன்னும் மந்தகதியில் நடைபெற்று வரும் பின்னணியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பல பகுதிகளில் உள்ள விவசாயிகள் நெல்லுக்கான உத்தரவாத விலை போதுமானதாக இல்லை என்று முறைப்பாடு செய்கின்றனர்.

2024 பெரும்போக நெல் அறுவடை ஆரம்பித்த போது விவசாயிகள் அரசாங்கத்திடம் நெல் கொள்முதல் செய்யத் தொடங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

நெல்லுக்கான அரசாங்கத்தின் உத்தரவாத விலை சமீபத்தில் அறிவிக்கப்பட்டது, மேலும் நெல் அறுவடைகளை வாங்குவதற்காக அரசாங்க நெல் களஞ்சிய சாலைகளும் திறக்கப்பட்டன.

இத்தகைய சூழலில், நெல்லுக்கு அரசாங்கத்தின் உத்தரவாத விலை போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் தொடர்ந்து கூறிவருகின்றனர்.

வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த சில விவசாயிகள், அரசாங்கம் வழங்கும் நெல்லுக்கு உத்தரவாத விலை போதுமானது என்று கூறுகின்றனர்.

விவசாயிகள் தங்கள் அறுவடையில் ஒரு பகுதியை அரசாங்க நெல் களஞ்சிய சாலைகளுக்குக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.” என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயமும் இன்று நீதிமன்றத்தில் அழைக் கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின் றது.



அந்தப் பத்திரிகை பற்றி குறிப்பிட்டதும் 'போக்கிரி' படத்தில் வரும் 'மண்டைக்கு மேல் இருக்கும் கொண்டையை மறந்துட் டேனே...!' என்ற வடிவேலுவின் நகைச் சுவைதான் நினைவுக்கு வருகிறது.

அந்தப் படத்தில் பாடி சோடாவாக நடிக்கும் வடிவேலு வேவு பார்ப்பதற் காக ரயிலில் வெவ்வேறு தோற்றங்களில் வேஷமிட்டு – ஒப்பனையிட்டு – வருவார். ஆனால் ஒவ்வொரு முறையும் அவர் அடையாளம் காணப்பட்டு செமத்தி யாக வாங்கி கட்டுவார். கடைசியாக தாம் ஒவ்வொரு வேடங்கள் போட்டும் இறுதியில் மாட்டிக்கொள்வது தனது தலைக்கு மேல் இருக்கும் கொண்டை காட்டிக் கொடுத்துத்தான் என்பதை பிந்தித் தான் உணர்வார். 'மண்டைக்கு மேலே இருக்கும் கொண்டையை மறந்துட் டேனே' என்று அங்கலாய்ப்பார்.

அதாவது களவு செய்யும் போது – வேடம் போடும் போது – தம்மைக் காட் டிக் கொடுக்கும் அடையாளத்தை பல சம யங்களில் கள்வர் மறந்து விடுவதை அந்த நகைச்சுவைப் பாணி சம்பவம் நினைவூட்டி நிற்கின்றது.

அந்த நிலைமையில் அகிலன் முத்துக் குமாரசாமியின் 'புதிய சுதந்திரன்' இதழும் ஒரு சிக்கலில் மாட்டியிருப்பதாகத் தெரி கிறது.

அண்மையில் காலமான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலை வர் மாவை சேனாதிராஜாவின் இறுதி நிகழ்வு சமயத்தில், கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் 18 பேரின் பெயர்கள், படங்களுடன் அவர்களை அவமரியா தைப் படுத்தி அச்சுறுத்தும் விதத்தில் கட்டப்பட்டிருந்த பனர் விவகாரம் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது தெரிந் ததே. அது குறித்து கட்சித் தலைமையின் முறைப்பாட்டின் கீழ் தெல்லிப்பளை பொலிஸார் புலன்விசாரணை செய்து வருகின்றமையும், பனர் தயாரித்துக் கட்டுவித்த சூத்திரதாரிகளைத் தேடி அவர்கள் விசாரணை நடத்தி வருவ தும் அறிந்தவையே.

அந்த பனர் தொடர்பில் ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டன. சுடுகாட் டிலும் பிற இடங்களிலும் கட்டப்பட்டிருந்த பனரின் புகைப்படங்களையே அவை யெல்லாம் பிரசுரித்து இருந்தன.

ஆனால், மேற்படி அகிலன் முத்துக் குமாரசுவாமி வெளியிடும் பத்திரிகை அதன் முதல் பக்கத்தில் அந்த பனரின் மூலப் படத்தை PDF (Portable Document Format) இல் பெற்று அப்படியே பிரசுரித்து இருந்தது. பனர் தயாரித்த தரப்பிடமிருந்து மட்டுமே அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது அந்த விவகாரத்தை ஒட்டி பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரமுகர் பீற்றர் இளஞ்செழியனால் பொலி ஸாருக்குச் சுட்டிக்காட்டப்பட்டியிருக்கின் றது எனத் தெரிய வருகிறது.

பனரைத் தயாரித்த தரப்புடன் தொடர்பு இருந்தால் மட்டுமே அதன் மூலம் PDF பட வடிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை பீட்டர் இளஞ்செழியன் தமது வாக்குமூலத்தில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றார்.

இப்போது சர்ச்சைக்கு உள்ளான அந்த பனரின் மூலப் படத்தை தாங்கள் எங்கிருந்து பெற்றுக் கொண்டார்கள் என்பதை அந்தப் பத்திரிகை பொலி ஸாருக்கு வழங்க வேண்டிய இக்கட்டில் உள்ளது.

வடிவேலு மண்டையில் இருக்கும் கொண்டையை மறந்தது தன்னைத் தானே காட்டிக் கொடித்தது போல, இந்த பனரின் மூலப் படத்தை பிரசுரித்த பத்தி ரிகை, அதன் மூலம் அதைத் தயா ரித்த குழுமத்தோடு தனக்கு இருக்கும் பிணைப்பையும் தன்னை அறியாமல் காட்டிக் கொடுத்து விட்டது என்றே தோன் றுகின்றது...!

ஒரு வகையில் இது, 'பாடி சோடா' க(ல்)லாநிதிதான் என்று நிரூபிக்கும் விவகாரமும் கூடத்தான்...!




**இதுதான் அந்தப் பத்திரிகை பிரசுரித்த PDF Format படம்.**

---

## அநுர அரசே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயர் பாதுகாப்பு வலயம் எனக் குறிப் பிட்டு அந்தப் பகுதிக்குள் மக்களைப் போக விடாமல் தடுத்துக் கொண்டு அந்தப் பகுதி யில் இரகசியமாக – அதிலும் கொரோ னாத் தொற்றுநோய் பரவிய காலத்தில் இராணுவத்தினரைப் பயன்படுத்தி இந்த விகாரையை – அதுவும் தமிழ் மக்களின் காணிகளிலே அமைத்திருப்பது மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகும்.

சட்டம் என்பது இந்த நாட்டில் நீதியா னதாக சமமானதாக இருந்தால் அது எல்லோருக்கும் உரியதாக இருக்க வேண் டும் என்று நாங்கள் பல தடவைகள் சொல்லியிருக்கின்றோம்.

குறிப்பாக தம்புள்ளையில் 30 ஆண் டுகளுக்கு மேலாக இருந்த காளி கோயி லைச் சட்டத்துக்குப் புறம்பானது என்று கூறி பௌத்த பிக்குமாருடைய வேண்டு கோளுக்கு இணங்க இரவோடிரவாக இடித்தழித்தனர்.

தமிழ் மக்களின் இந்துக் கோயிலை இப்படி இடித்தழிக்கலாம் என்றால் போருக் குப் பிற்பாடு கடந்த பத்து ஆண்டுகளுக் குள் கிட்டத்தட்ட 7 ஆண்டுகளுக்குள் கட் டப்பட்ட இந்த விகாரையைச் சட்டத்தின் பிரகாரம் ஏன் இடிக்க முடியாது என்ற கேள்வியைத்தான் நாங்கள் கேட்டிருக்கின் றோம்.

ஏனென்றால் இது தமிழர்களின் காணி. அவர்களின் சொந்த நிலம். அவர்கள் வாழுகின்ற நிலம். இங்கே விகாரைக்கென ஒதுக்கப்பட்ட அல்லது விகாரை இருந்த இடத்தில் விகாரை கட்டியிருந்தால் யாரும் அதைப் பற்றி கேட்கப்போவதில்லை.

இந்த இடம் எங்களுடைய பூர்வீக நிலம். இந்த விகாரையை மையப்படுத்தி இதனைச் சுற்றி இப்போது 14 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை மீண்டும் கபளீகரம் செய்ய முயற்சிப்பது மிகப் பெரிய அராஜகம்.

இந்த அராஜகங்களுக்கு எதிராகத் தான் காணி உரிமையாளர்களின் வேண் டுகோளுக்கிணங்க தமிழ் மக்கள் ஒன்று திரண்டு தங்களுடைய போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள்.

இந்தப் போராட்டம் பல பேரின் முயற்சி யாலும், மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் தொடர்ந்து முன்னெடுக்கப் படுகின்ற இந்த நேரத்தில் இன்னும் இந் தப் போராட்டங்கள் விரிவடைய வேண்டும்.

அரசு இதனைச் சரியான முறையில் அணுக வேண்டும். இப்போது இருக்கின்ற அரசு நடுநிலையோடு இருக்கின்றது, சிஸ்டம் சேஞ்சை உருவாக்குகின்றது, மாற்றத்தைப் பற்றி சிந்திக்கின்றது என்றால் இந்த மக்களுடைய காணியை உடன் விடுவிக்க வேண்டும்.

கொழும்பில் கூட பல விகாரைகள் இரவோடிரவாக இடிக்கப்பட்டு இருக்கின் றன. தமிழர் பகுதிகளில் கோயில்கள் சட்டத்துக்கு உட்பட்டு கட்டப்பட்டிருந்தாலும் அழிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை யெல்லாம் தாண்டி இங்கே தமிழர்களின் நிலத்தைப் பறித்திருப்பது அபாயகரமானது.

ஆக்கிரமிப்பும் அபகரிப்பும் அழிப் பும் தமிழில் பகுதிகளில் தொடர்ந்தும் நடை பெறுகின்றன. இதனைத் தடுத்து நிறுத் துமாறு நாங்கள் மீண்டும் சர்வதேச சமூ கத்திடமும் அரசிடமும் கோரிக்கை விடுக்கின்றோம்.

தமிழர் தாயகத்தின் பல இடங்களிலும் விகாரைகள் அமைக்கப்படுவதெல்லாம் தமிழர் நிலங்களைப் பறித்தெடுக்கச் செய்யப்படுகின்ற முயற்சிகள்தான்.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரு முயற்சியினுடைய கட்டம் என்பதைத் தான் இந்த மக்களினுடைய திரட்சி காட் டுகின்றது. எனவே, தீர்வை அரசு வழங்கா விடின் அடுத்துவரும் காலங்களில் போராட் டம் தொடரும்.

அரசு இதற்கு நீதியான – நியாயமான தீர்வு வழங்க முன்வர வேண்டும். தவறி னால் இன்னுமொரு முறை விளைவை ஏற்படுத்தும் அல்லது இந்த நாட்டிலே நீதியற்ற சிங்கள அரசினுடைய முகத்தை இன்னும் துலாம்பரமாகக் காட்டும்.

உண்மையில் நீதியான அரசாக இந்த அரசு இருக்கும் என்றால் கட்டாயம் இந்தப் பிரச்சினைக்கு நீதியை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின் றேன்." – என்றார்.



# கனடாத் தூதுவர் நாளை வருகிறார்

(ந.லோகதயாளன்)

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் நாளை யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

அவர் நாளை காலை 9 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடுகின்றனர்.

ஆளுநரின் சந்திப்பைத் தொடர்ந்து யாழ் நகரின் மத்தியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் இடம்பெறும் ஒரு நிகழ்விலும் அவர் பங்கு கொள்கின்றார்.

# ஐக்கிய தேசிய கட்சியுடனான பேச்சுவார்த்தை தற்காலிகமாக இடைநிறுத்தம்: எஸ்.எம்.மரிக்கார்

“ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. சில பிரச்சினைகளின் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய தேசிய கட்சி உட்பட கூட்டணியாக பல கட்சிகள் ஒன்றிணையும் போது அதன் தலைவராக சஜித் பிரேமதாஸவே நியமிக்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைகள் இடம்பெறும்போது அவற்றில் பேசப்படாத விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கு யாருக்கும் உரிமையில்லை. யானை சின்னத்திலோ அல்லது தொலைபேசி சின்னத்திலோ உத்தேச தேர்தல்களில் போட்டியிடாமல், புதிய சின்னத்தில் போட்டியிடப் போவதாக அவர்கள் எவ்வாறு கூறலாம்?



உண்மையில் இது ஐக்கிய தேசிய கட்சியுடனான இணைவு அல்ல. ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்கு வங்கியுமில்லை. மோசடியாளர்களுடன் அல்லது வாக்கு வங்கி அற்றவர்களுடன் இணைவதாக இதனை குழப்பிக் கொள்ள தேவையில்லை,”– என்றார்.

# சுகாதாரம், ஊடகம் அமைச்சுகளில் அதிக வெற்றிடங்கள் நிலவுகின்றன

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு




அரச சேவையில் தற்போதுள்ள வெற்றிடங்களில், அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சில் காணப்படுகின்றன.

இந்த எண்ணிக்கை 3,519 என்று அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த எண்ணிக்கை 3,000 எனக் கூறப்படுகிறது.

அமைச்சுகள், மாகாண சபைகள் மற்றும் ஆணைக்குழுக்களில் உள்ள மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 7,456 என்று அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை சுமார் 30,000 எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ரயில் மோதி ஒருவர் பலி!

(ராமு தனராஜா)

எல்ல நானுஓயா ஓ.டி.சி. ரயிலில் ஒருவர் மோதுண்டு உயிரிழந்துள்ளார் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

நானுஓயாவில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த ஓ.டி.சி. ரயிலில் ஹாலிஎலைக்கும் பதுளைக்கும் இடைப்பட்ட பகுதியில் மேற்படி நபர் மோதி உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மேற்படி நபர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை.

40 வயது மதிக்கத்தக்க நபரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாயமான கடற்கரை

தமிழ் சினிமாவில் நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் காமெடிக் காட்சி ஒன்று வரும். தான் வெட்டிய கிணறு திடீரெனக் காணாமல் போய்விட்டது என அவர் பொலிஸ் நிலையத்தில் வந்து சத்தமிட்டு முறையிடுவார். 'வட்டக் கிணறு, வற்றாத கிணறு, எண்பது அடி ஆழக் கிணறு... அதைத் திடீரெனஆட்டையைப்போட்டுவிட்டார்கள்..' என அவர் முறையிடுவார். அந்த முறையீட்டை விசாரிக்க இயலாத பொலிஸ் அதிகாரி தமது சீருடைகளை கழற்றிக் கொடுத்துவிட்டு பொலிஸ் சேவையை விட்டே ஓடித் தப்புவார் என்பது அந்த சினிமாக் காட்சி.

அதுபோன்று காணாமல் போன ஒன்றை இலங்கையில் புதிய அரசு இப்போது தேடப் புறப்பட்டிருக்கின்றது. அதற்கான விசாரணையை ஆரம்பித்து இருக்கின்றது.

கொழும்பு கல்கிஸைக் கடலோரத்தில் 89 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட செயற்கைக் கடற்கரை காணாமல் போன சம்பவம் தொடர்பில் மீள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவித்திருக்கிறது.

கல்கிஸைக் கரையோரத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்கைக் கடற்கரை தொடர்பில் புதிய ஆய்வு நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கலாநிதி தம்மிக்க படபெந்தி தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்கைக் கடற்கரை தொடர்பான செயற்பாட்டு அறிக்கைகளை தமது திணைக்களம் மீளாய்வு செய்து வருவதாக கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி டேர்னி பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தி நாடாளுமன்றத்தின் பொது நிறுவனங்கள் மீதான குழுவுக்கு (கோப்) அறிக்கை அளிக்கவும் அதிகாரிகள் தயாராகி வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

"ஏப்ரல் 2021 இல், நாடு தழுவிய பயணத் தடையின் போது, பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மணல் நிரவப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் நாங்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டபோது, புதிதாக உருவாக்கப்பட்ட செயற்கைக் கடல் சுவர் இப்போது தெரியவேயில்லை." - என்று அவர் கூறினார்.

உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள மேலாண்மைத்துறை இந்தத் திட்டத்திற்கு பொலிஸ் பாதுகாப்புக் கோரியிருந்தது.

அப்படி அமைக்கப்பட்ட செயற்கைக் கடற்கரையே இப்போது மறைந்து விட்டது. அது தற்போது முற்றாக அரிக்கப்பட்டுவிட்டது என்று கூறப்படுகின்றது.

"செயற்கை கடற்கரை மூன்று கட்டங்களாக நிர்மாணிக்கப்பட்டது. இந்த திட்டத்திற்காக மொத்தம் 15 லட்சம் கன மீட்டர் மணல் பயன்படுத்தப்பட்டது. கணக்குகளின்படி, கல்கிசை கடற்கரையிலிருந்து 6 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கடலில் இருந்த. அம்மணல் பெறப்பட்டது." - என்று அவர் மேலும் கூறினார்.

சர்வதேச அளவில் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரத்தின் படி, ஒரு டென்மார்க் நிறுவனம், உள்ளூர் கட்டுமான நிறுவனத்துடன் இணைந்து, செயற்கைக் கடல் சுவரை உருவாக்கும் பொறுப்பை ஏற்றது. மூன்று கட்டங்களுக்கு எட்டு லட்சம் கன மீட்டர் கடல் மணலை அது பயன்படுத்தியது என்றும் கூறப்பட்டது. ஆனால், இப்போது அங்கு மிச்சம் ஏதுமில்லை.

சமுத்திரத்துக்கு சுவாஹா செய்ததாகக் கணக்குக் காட்ட வேண்டியதுதான்...!

# எங்கள் கடல் வளத்தை அழித்தொழித்து விட்டு தொப்புள் கொடி உறவு எனக் கூறுவது நியாயமா?

## தமிழக மீனவர்களிடம் அமைச்சர் சந்திரசேகர் கேள்வி



இலங்கையின் கடல் வளத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் தமிழக மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும், இவ்வாறு நாசகார செயலில் ஈடுபட்டுவிட்டு செல்லும் வழியில் தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயன் இல்லை எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் அத்துமீறும் செயற்பாடு தொடர்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு விசேட கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"தமிழக மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் மூன்று நாட்கள் வந்தார்கள், தற்போது ஏழு நாட்களுக்கும் வருவதற்கு முற்படுகின்றார்கள். எமது நாட்டு மீன்களைப் பிடிப்பது மட்டுமல்ல கடல் வளத்தையே நாசம் செய்கின்றார்கள். இதனால் நாளைய தலைமுறையினருக்குரிய கடல் வளம் இல்லாமல் போகின்றது.

எனவே, இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிக்க வேண்டாம் எனத் தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதற்கான உரிமை அவர்களுக்குக் கிடையாது.

எமது நாட்டு கடல் எல்லைக்குள் வந்து மீன்களைப் பிடித்துக்கொண்டு செல்லும் வழியில் எங்களைத் தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயன் இல்லை.

தமிழக மீனவர்கள் மீதோ, தமிழகத் தலைவர்கள் மீதோ எமக்கு எவ்வித கோபமும் இல்லை. ஒரு சில மீனவர்கள்தான் டோலர் படகுகளைப் பயன்படுத்தி, தடை செய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்தி எமது கடல் வளத்தை நாசமாக்குகின்றார்கள். அதனையே நாம் எதிர்க்கின்றோம்.

எமது நாட்டு எல்லைக்குள் அத்துமீறா விட்டால் எவரையும் கைது செய்ய வேண்டியது தேவைப்பாடு எழாது. எனவே, எங்களது கடல் எல்லைக்குள் புகுந்து, கடல் வளங்களை நாசமாக்க வேண்டாம் எனப் போராடும் தமிழக மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் எல்லை தாண்டாவிட்டால் எவ்வித பிரச்சினையும் எழாது." – என்றார்.

# சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை விரைவில் நிறைவு செய்வதற்கு புதிய வேலைத்திட்டங்கள்



சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளை விரைவில் நிறைவு செய்வதற்காக புதிய வேலைத் திட்டங்களை தயாரிக்கவுள்ளதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

சில சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்வதற்கு பல வருடங்கள் செல்வதாக அவர் கூறினார்.

துஷ்பிரயோகம் இடம்பெற்ற தினத்திலிருந்து வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு சுமார் 05 வருடங்கள் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

காலம் தாழ்த்தி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு சாட்சி வழங்கப்படும் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களினால் சம்பவம் தொடர்பான முழுமையான தகவல்களை நினைவில் வைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு இடம்பெறும் போது குற்றவாளிகள் தப்பிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக நீதியமைச்சர் கூறினார்.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் சட்ட மா அதிபரே வழக்கு தாக்கல் செய்வதாகவும் அவரது பணிக் குழாத்தில் ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் தனியான பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் வழக்கு விசாரணைகளை விரைவில் முடிவுறுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணாயக்கார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் பழைய அரசியல் கலாசாரம் தோற்கடிக்கப்பட்டுள்ளது: பஷீர் சேகுதாவூத்



"நாடாளுமன்ற தேர்திலில் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சிக்கு ஓர் ஆசனம் மட்டுமே கிடைத்தது. தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களை வெற்றிகொண்டிருப்பது பாரிய விடயமாகும். பழைய அரசியல் கலாசாரம் அங்கு தோற்கடிக் கப்பட்டிருக்கிறது."

– இவ்வாறு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் சிரேஷ்ட தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தேசிய மாநாடு நேற்று புதன்கிழமை மருதானை குப்பியாவத்தை சனசமூக பண்ட பத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"சுதந்திரத்துக்கு பின்னர் எமது நாட்டை பிரதான அரசி யல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுமே ஆட்சி செய்து வந்தன. இதில் சிறுபான்மை கட்சிகளாக தமிழ் கட்சிகள் மொழியை முன்வைத்தும் முஸ்லிம் கட்சிகள் மார்க்கத்தை சொல்லியும் அரசியல் செய்து வந்தன. ஆனால் இந்த அனைத் தையும் பின்தள்ளிவிட்டு கடவுளே இல்லாத ஒரு கட்சி அனைத் தையும் துடைத்தெரிந்துவிட்டு 159 ஆசனங்களை பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது.

ஒரு சிறிய கட்சி பிரதான இரண்டு கட்சிகளையும் தோற் கடித்துவிட்டு ஆட்சிக்கு வருவதற்கு காரணம், பிரதான கட்சிக ளின் மீது மக்களின் விரக்தியாகும். நாடாளுமன்ற தேர்தி லில் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சிக்கு ஓர் ஆசனம் மட்டுமே கிடைத்தது. தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களை வெற்றிகொண்டிருப்பது பாரிய விடயமாகும். பழைய அரசியல் கலாசாரம் அங்கு தோற்கடிக்கப் பட்டிருக்கிறது. என்றாலும் தற்போதைய அரசாங்கத்தின் நிலைமையயை இன்னும் இரண்டு மாதங்கள் செல்லும் போது தெரிந்துகொள்ள முடியுமாகும்.

ஏனெனில் நாங்கள் வாக்களித்து அரசாங்கததை தெரிவு செய்தாலும் அரசாங்கத்தை வழிடத்துவது இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற சர்வதேச நாடுகளாகும். எமது நாடு அமைந்தி ருப்பது முக்கியமானதொரு கேந்திர முக்கியத்துவமான இடத்திலாகும். குறிப்பாக திருகோணமலை துறைமுகம் இயற்கை துறைமுகமாகும்.

எந்தப்பெரிய கப்பலை வேண்டுமானாலும் அங்கு கொண்டு செல்லலாம். அதனால் அந்நாடுகளின் பாதுகாப்பு கருதி இந்த துறைமுகத்தை கைப்பெற்றிக்கொள்ள இந்த நாடு களிடத்தில் போட்டித்தன்மை இருந்து வருகிறது." என் றார்.

# இழப்பீட்டு விசாரணையை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளமை மகிழ்ச்சிக்குரியது

## பிரேம்நாத் சி தொலவத்த தெரிவிப்பு



"இழப்பீடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ள தாக அரசாங்கம் தெரிவித்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தயவு செய்து என்னிடமிருந்து விசாரணைகளை ஆரம்பியுங்கள். அதற்கமைய குற்றம் செய்யத் தூண்டி யவர்களுக்கு எதிராக எம்மால் நீதிமன்றம் செல்ல முடி யும்."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கை சுங்க வரலாற்றில் பாரிய மோசடியாக 300க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையைக் குறிப் பிடலாம். அதனையும், தண்ணீரில் அடங்கியுள்ள புற்று நோய் மூலக்கூறுகள் தொடர்பான சர்ச்சையையும், நெல்லுக் கான உத்தரவாத விலை குறித்த சிக்கல்களையும் மறக்கச் செய்வதற்காக தற்போது முன்னாள் அமைச்சர்களும், எம். பி.க்களும் பெற்றுக் கொண்ட இழப்பீட்டு அறிக்கை வெளி யிடப்பட்டுள்ளது.

இழப்பீடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க வுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தயவு செய்து என்னிடமிருந்து விசாரணைகளை ஆரம்பியுங்கள்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரப்பட்டவாறு இந்த இழப்பீடுகள் மதிப்பீடு செய்யப்பட்ட முறைமையை தொடர்பில் எனக்கு தெரியப்படுத்துங்கள். அதற்கமைய குற்றம் செய்யத் தூண்டியவர்களுக்கு எதிராக எம்மால் நீதிமன்றம் செல்ல முடியும்.

அதற்கமைய நீதிமன்றத்தின் ஊடாக அவர்களிடமி ருந்து இழப்பீட்டைப் பெற்று, அதனை மீள அரசாங்கத்திடம் கையளிக்க முடியும். 25 லட்சம் அதிகபட்ச இழப்பீடு தொடர்பி லும் தற்போது பேசப்படுகிறது. அனர்த்த முகாமைத்துவ சட்டம் என்பது இயற்கை பேரிடர்களால் ஏற்படக் கூடிய பாதிப் புக்களுக்காக நிவாரண கொடுப்பனவு வழங்கும் முறை மையாகும். எவரேனும் ஒருவரது பரம்பரை சொத்துக்களை அழிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. அவற்றை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யவும் முடி யாது.

எனவே அனர்த்த முகாமைத்துவ சட்டத்தைக் காண்பித்து மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கேட்டுக் கொள்கின்றேன். தேசிய ரீதியில் ஏற்பட்ட மின்தடைக்கு குரங்குகள் மீது பழிபோடும் அரசாங் கத்திடம் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வு களும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ள இல்லத்தை மீளப் பெறுவதற்கான சட்ட ரீதியான அதிகாரம் அராங்கத்துக்கு இல்லை. எனவே தான் மக்களை கடிதம் அனுப்புமாறு கோருகின்றனர். மக்கள் உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்." என்றார்.




# எல்லைகளை கடந்து சவால்களுக்கு முகங்கொடுக்க ஒன்றிணையுங்கள்

## ஜனாதிபதி அழைப்பு!




"உலக காலநிலை பிரச்சினைகள் வறியவர் செல்வந்தர் என்று பாராமல் அனைவரினதும் கதவுகளைத் தட்டிக் கொண்டிருக்கின்றன. தேச எல்லைகளைக் கடந்து பயணிக்கின்ற சவால்களுக்கு முகங்கொடுக்க உலகளாவிய பிரஜைகள் என்றவகையில் ஒன்றிணைய வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் உலக அரச உச்சி மாநாட்டில் நேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் அரச நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையின் நோக்கு என்ற தலைப்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றினார்.

இந்த உரையில் நிலையான அபிவிருத்தி மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான இலங்கையின் அர்ப்பணிப்பும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

மானிட வர்க்கம் தொடர்பான முக்கியமான துறைகளில் எதிர்கால உத்திகள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த மாநாடு உந்து சக்தியாக அமையும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுக்க உலகளாவிய கூட்டுச் செயற்பாடும், முன்னணியொன்றினது அவசியத்தையும் வலியுறுத்தினார்.

சமூக நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியானது தரமிக்க தேசமொன்றைப் போன்றே வளமிக்க உலகமொன்றுக்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது எனவும், உடன்படிக்கைகளையும் சட்டங்களையும் முறைசார்ந்தவகையில் அமுலாக்குவதும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் உறுதி நிலையற்ற சமுதாயங்களுக்கு முறைப்படி ஒத்துழைப்பினை வழங்குவதும்,

உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காகச் சுதந்திர ஊடகங்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதன்போது வலியுறுத்தினார்.

டிஜிட்டல் அணுகல் உரிமைகள், சுற்றாடல் உரிமைகள் உள்ளடங்களாக 1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலில் புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய பிரகடனத்தின் அவசியம் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

உலகளாவிய நிதியளிப்பு நிபந்தனைகள் அதிகரிக்கின்றமை, எதிர்காலத்தில் செலுத்தப்படவுள்ள பெருந்தொகையான கடனைச் செலுத்துதல் மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நிகழ்கால சர்வதேச நிதிக்கட்டமைப்பு பலவீனமான வகையில் தயாராகியமையால் உலகளாவிய நோக்கு மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளதெனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க,

நவீன உலகிற்கு நியாயமானவகையில் சீராக்கிக்கொள்ளக்கூடிய நிதிசார் திருத்தங்களின்பால் மாற்றமடைவது மிகவும் முக்கியமான விடயமாக அமைகின்றது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதற்காகப் பிரஜைகளின் பங்கேற்பு முக்கியமானது என்பதைச் சுட்டிக்காட்டியதோடு, பிரஜைகள் சுற்றுச்சூழல் மீது பற்றுக்கொண்டவர்களாக மாற வேண்டும் என்பதை ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

மனிதர்களை மையப்படுத்திய எதிர்கால பொருளாதார அபிவிருத்தி குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி,

சைபர் பாதுகாப்பு செயன்முறையை நோக்கி உலகம் நகர வேண்டியிருப்பதன் முக்கியத்துவத்தையும், ரொபோக்கள் பயன்பாட்டினால் தொழில் வாய்ப்புக்களை இழக்கின்ற மனித சமூகத்தை வலுவூட்டக் கல்வி, திறன் மேம்பாடு, புதிய தொழில் வாய்ப்புக்களை அறிந்துகொண்டு சரியான வேலைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்த வேண்டுமெனவும் அதற்காக உலகத் தலைவர்கள் ஒற்றுமையாகச் செயலாற்ற வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பிரச்சினைகளைப் போன்றே எமது இதயங்களின் "லப் டப்" ஓசையும் ஒன்றாக ஒன்று சேர்த்து உலகத்தைக் கட்டியெழுப்புவோம் என்றும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

நாங்கள் ஒன்றுசேர்ந்து அழகான வாழ்க்கையை அழகான உலகத்தை உருவாக்கிடுவோம் என உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் 139 பேருக்கு இடமாற்றம்



பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் 139 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி பிரியந்த விஜேசூரியவினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பலர் சாதாரண கடமைகளிலும் ஈடுபடவுள்ளனர்.

50 புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 53 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் சாதாரண கடமைகளில் ஈடுபடவுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# அஸ்வெசும கொடுப்பனவு இன்று வங்கிக் கணக்குகளில்

1,725,795 குடும்பங்களுக்கான பெப்ரவரி மாதத்திற்கான அஸ்வெசும உதவித்தொகை இன்று வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படவுள்ளது.

இதற்காக அஸ்வெசும பயனாளிகளுக்காக 12,555,651,250 ரூபா தொகை வழங்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பயனாளிகள் இன்று முதல் தங்கள் வங்கிக் கணக்குகளிலிருந்து அஸ்வெசும தொகையைப் பெற முடியும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1962 | 2025 |
| 09 | 02 |
| 06 | 09 |



## இராஜநாயகம் பாரதி

### (மூத்த ஊடகவியலாளர் )

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பையும் திருநெல்வேலியையும் வசிப்பிடமாகவும் கொண்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி கடந்த சனிக்கிழமை (09.02.2025) அன்று திருநெல்வேலியில் அவர் வாழ்ந்த இல்லத்தில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல கணித ஆசிரியர் சு. இராஜநாயகம் - சிவயோகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வடமராட்சி விவாகப் பதிவாளர் சி. தாமோதரம்பிள்ளை - தனலக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகனும் தேவகியின் அன்புக் கணவரும் பார்த்தீபனின் பாசமிகு தந்தையும் அமரர் பரதன் , சுரபி ஆகியோரின் அன்பு சகோதரனும் ப. விநோதினி, க.சிவராசா, சுகந்தி, கௌரி, காலஞ்சென்ற நளினி, பரன், பாமதி, சபேசன், பத்மநிதி, சுபேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக 105/1 பலாலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை 13. 02. 2025 வரை வைக்கப்படும்.

வியாழன் அன்று காலை 9:00 மணியளவில் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டு 11:00 மணியளவில் ஈமக் கிரிகைகளைத் தொடர்ந்து 1:30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு :
077 189 4012 (மனைவி)
+44(0)7580763790 (மைத்துனர்)



# பாரதிக்கு அமைச்சர் சந்திரசேகர் அஞ்சலி

**(த.சுபேசன்)**

மூத்த ஊடகவியலாளர் இ.பாரதியின் பூதவுடலுக்கு கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் நேற்று முன்தினம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் அமைந்துள்ள ஊடகவியலாளர் பாரதியின் வீட்டிற்குச் சென்று அஞ்சலி செலுத்தியமையுடன் அவரது குடும்பத்தாருக்கு அனுதாபங்களையும் தெரிவித்திருந்தார்.

# நற்பண்புகள் நிறைந்த பத்திரிகையாளன் பாரதி

## சி.வி.கே.சிவஞானம் இதயபூர்வமாக அஞ்சலி



ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் யாவற்றையும் தன்னகத்தே கொண்ட பெருமைக்குரியவராக வாழ்ந்த பாரதி இன்னும் வாழ்ந்திருக்க வேண்டும். ஏனோ இயற்கை நியதி இறைவன் அவரை தன்னிடம் அழைத்துக் கொண்டான்.

– இவ்வாறு பத்திரிகையாளன் பாரதிக்கு புகழாரம் சூட்டி அஞ்சலித்திருக்கின்றார் யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும், வடமாகாண சபை அவைத் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம்.

பாரதியின் மறைவையொட்டி அவர் வெளியிட்ட இரங்கள் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த 09.02.2025 அன்று காலமான இராசநாயகம் பாரதியை 1980களின் நடுப்பகுதியில் அவர் 'முரசொலி' பத்திரிகையின் உதவி ஆசிரியராக இருந்த போதிலிருந்து அறிந்தவன் நான். இக்கட்டான அந்த காலத்தில் தமது ஊடகத்துறை குருவும் வழிகாட்டியுமான திருச்செல்வம் அவர்களுக்கு மிக நம்பிக்கைக் குரியவராக இருந்தார்.

அந்தக் காலத்தில் ஊடகத்துறையும் அரசியல் துறையும் பிரதான அரச சேவைத் துறையும் அச்சுறுத்தல் நிறைந்த நித்திய கண்டம் என்ற நிலையிலேயே பணியாற்றினர். அவ்வாறான சூழ்நிலையில் பாரதி திருச்செல்வத்துடன் இணைந்து தமிழ்த் தேசிய இன விடுதலைக்கான போராட்டத்தைத் துணிவுடன் தீவிரமாக ஆதரித்துச் செயற்பட்டவர்.

அவ்வாறான பணி நிமித்தம் திருசெல்வம் அவர்களின் கோரிக்கையின் பேரில் திருகோணமலைக்கு பயணித்த போது விபத்துக்கு உள்ளாகி தமது வலது கையை இழந்தார். அப்படியிருந்தும் மனஉறுதி தளராது இடது கையை முத்தாளனாக மாறி ஊடகப் பணியைத் தொடர்ந்தார். இலங்கையின் பிரதான பத்திரிகைகள் பலவற்றில் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை பெற்றவர். எல்லோராலும் மதிக்கப் பெற்ற ஆளுமையாளன், ஊடகத்துறையின் காத்திரமான வளவாளராகத் திகழ்ந்தார்.

அவரது பொறுமை, அமைதி, ஆழமான தமிழினப் பற்று நன்றியுள்ளம் என்ற பண்பியல்புகளை நான் எப்போதும் வியந்து பார்த்துள்ளேன். அவற்றுள் மிக முக்கியமாக நான் கண்டது அவர் தனது வழிகாட்டியான திருச்செல்வம் அவர்களுக்கான பாராட்டு விழாவை 2019 மார்ச் மாதத்தில் கனடாவுக்குச் சென்று மூன்று வாரம் தங்கியிருந்து மலர்க்குழுவில் ஒருவராக இருந்து அந்த விழாவை நடத்தியமை அவரது நன்றி மறவாத உள்ளத்தின் உச்சம் தொட்ட செயலாகும்.



ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் யாவற்றையும் தன்னகத்தேகொண்டபெருமைக்குரியவராக வாழ்ந்த பாரதி இன்னும் வாழ்ந்திருக்க வேண்டும். ஏனோ இயற்கை நியதி இறைவன் அவரை தன்னிடம் அழைத்துக் கொண்டான்.

நான் மிகவும் நேசித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் தம்பி பாரதியின் ஆன்மா இறைவனின் பாதார விந்தத்தில் அமைதி பெற பிரார்த்தித்து அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– என்று உள்ளது.



# பிரதமர் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை

## நான்கு கூட்டங்களில் பங்கு கொள்கின்றார்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணத்திற்கு நாளை மறுதினம் வருகை தரும் பிரதமர் இங்கு நான்கு கூட்டங்களில் பங்குகொள்ளவுள்ளார் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ஹரிணி அமரசூரிய நாளை மறுதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றார்.

அவர் கோப்பாய் கல்வியல் கல்லூரியில் இடம்பெறும் கல்விசார் கலந்துரையாடலில் பங்குகொள்கின்றார். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் சுழிபுரம், ஏழாலை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் இடம்பெறவுள்ள பொதுக் கூட்டங்களில் அவர் பங்கேற்கவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணம் வருகை தந்த சமயம் வல்வெட்டித்துறை மற்றும் சாவகச் சேரியில் இடம்பெற்ற பொதுக் கூட்டங்களில் பங்குகொண்டு மக்களைச் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# கடந்த அரசாங்கங்களால் கைவிடப்பட்ட நிர்மாணப் பணிகளை முடிக்க முடிவு




கடந்த அரசாங்கங்களின் காலத்தில் இடை நடுவே கைவிடப்பட்ட வேலைத்திட்டங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரத்திற்குட்பட்ட பல பிரதேச மட்டங்களில் இத்தகைய வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக துறைசார் பிரதி யமைச்சர் ருவன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

பாலங்கள், வளைவுகள் மற்றும் கிராமப்புற வீதி கள் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்கள் இவ்வாறு அடை யாளம் காணப்பட்டுள்ளன அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத் திட்டங்களுக்கான நிர்மாணப் பணிகள் உரிய திட்டமிட் இன்றி ஆரம்பிக்கப்பட்டமை யினால் அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் சிக்கல் எழுந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்படாமை யினால் அவற்றின் பலனை பெற்றுக்கொள்ளவிருந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதியமைச்சர் ருவன் செனவிரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆராய்ந்து எதிர்வரும் வரவு - செல வுத்திட்டத்தின் ஊடாக இடைநடுவே கைவிடப்பட்ட அனைத்து வேலைத் திட்டங்களையும் நிறைவு செய்யு மாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வவுணதீவில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை ஒருவர் கைது; பத்துப் பீப்பாய்கள் கோடாவும் மீட்பு





**(கனகராசா சரவணன் )**

வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள காஞ்சரம்குடா பெரியகாளைகோட்டை மடு நெல்லிக்காடு ஆற்றுப்பகுதியில் இரு கசிப்பு உற்பத்தி நிலையங்களை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸார் முற்றுகையிட்டு ஒருவரைக் கைது செய்ததமையுடன் 10 பீப்பாய்கள் கொண்ட கோடாவையும் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.ஜ.சில்லாவின் தலைமையில் பொலிஸார் செவ்வாய்க் கிழமை பெரியகாளைகோட்டைமடு பகுதியிலுள்ள கசிப்பு உற்பத்தி நிலை யத்தை முற்றுகையிட்டனர். இதன் போது ஒருவரை ஒரு பீப்பாய் கோடாவுடன் அவர்கள் கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து நெல்லிகாடு கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகை யிட்டபோது அங்கு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் தப்பி ஓடினர். அங்கு 9 பீப்பாய்கள் கொண்ட கோடாவை மீட்டு அங்கு அவை அழிக்கப்பட்டன. வெறும் பீப்பாய்களை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவந்தனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன் றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்த னர்

# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியும் குழுவினரும் வலி வடக்கு நிலைமைகளை நேரில் ஆய்வு



(ந.லோகதயாளன்)

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியும் அவரது குழுவினரும் வலி வடக்கிற்கு பயணித்து விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் மக்களின் வாழ்வியல் மற்றும் பொருளாதாரமேம்பாட்டைநேரில்அவதானித்தனர்.


யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான பிரதிநிதி இங்கு அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிற்கும் நேரில் சென்று அவரும் குழுவினரும் நிலைமைகளை அவதானித்தார்.

இதன்போது மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம், பலாலி வடக்கில் அமைந்துள்ள 110 வீட்டுத் திட்டம், பலாலி கிழக்கு ஆகிய இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஐ.நாவின் அதிகாரிகளுடன் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

# கரடியனாறுப் பகுதியில் இரண்டு குண்டுகள் மீட்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரலக்குளம் முற்றும் அம்பவத்தை பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்து கைகுண்டு ஒன்றையும், ஆர்.பி.ஜி. ரக குண்டு ஒன்றையும் நேற்றுப் புதன்கிழமை தாங்கள் மீட்டுள்ளனர் எனக் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த இரு பிரதேசங்களின் காட்டை அண்டிய பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் இரு குண்டுகள் இருப்பதைகண்டு பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர்.

மீட்டகப்பட்ட குண்டுகளை நீதிமன்ற அனுமதியை பெற்று செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

# மோடியின் அமெரிக்க பயணத்துக்கு முன்னதாக தாக்குதல் அச்சுறுத்தல்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணத்திற்கு முன்னதாகவே பயங்கரவாத தாக்குதல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக மும்பை பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இந்தியப் பிரதமர் தனது உத்தியோக பூர்வ பயணத்திற்காக வெளிநாட்டிற்குச் செல்லும்போது மும்பை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்குதல் எச்சரிக்கை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பிரதமர் உத்தியோகபூர்வ பயணமாக வெளிநாட்டிற்குச் செல்லும் வேளையில் அவரது விமானம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என மும்பை பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அச்சுறுத்தலின் தீவிர தன்மையைக் கருத்தில் கொண்டு, மும்பை பொலிஸ் மற்ற தொடர்புடைய நிறுவனங்களுக்கு தகவல் அளித்து விசாரணையைத் தொடங்கியது.

விசாரணையின் பின்னணியில் தாக்குதல் அச்சுறுத்தல் அழைப்பு விடுத்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரியவந்துள்ளது.

அந்த நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் அவர் மும்பையின் செம்பூர் பகுதியில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் மும்பை பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம், இது தொடர்பான மேலதிக விசாரணையினையும் மும்பை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பழநி முருகன் கோயிலில் பஞ்சாமிர்த தட்டுப்பாடு!

## இந்து முன்னணி கண்டனம்



தைப்பூச திருவிழா சமயத்தில் பழநியில் பஞ்சாமிர்த பிரசாதமும் மற்ற கோயில்களில் நெய்வேத்திய பிரசாதமும் கிடைக்கவில்லை என குற்றம் சாட்டியுள்ள இந்து முன்னணி, பக்தர்களை சிரமத்துக்கு உள்ளாக்கிய இந்து சமய அறநிலைத் துறையும் தமிழக அரசும் முருக பக்தர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநில மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

”தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற திருவிழா தைப்பூசம். இத்திருவிழாவுக்கு இந்துக்கள் நேர்த்திக் கடன் செலுத்த விரதமிருந்து, வேல்குத்தி, காவடி சுமந்து பாதயாத்திரையாக நடந்து சென்று வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர்.

முருகனின் ஆறுபடை வீடுகள் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள முருகன் ஆலய தலங்களில், முருகனின் சன்னதி இருக்கின்ற கோயில்களில் கோடிக்கணக்கான மக்கள் தைப்பூசத்தன்று வழிபாடு செய்தனர். பழநியில் மூன்று கிலோ மீற்றர் அளவுக்கு வரிசையில் நின்று பக்தர்கள் தரிசனத்துக்காக காத்திருந்தனர். இதேபோல திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, திருத்தணி, சுவாமிமலை, சென்னிமலை, மருதமலை, வடபழனி முருகன் கோயில், முத்துமலை மற்றும் பலமுருகன் கோயில்களில் முருக பக்தர்கள் பாதயாத்திரையாகவும், வாகனங்களிலும் கோயிலுக்கு வந்து தரிசனத்திற்காக காத்திருந்தனர்.

வரும் பக்தர்களிடம் உண்டியல் காணிக்கை, பிரசாத விற்பனை, அர்ச்சனை, வாகன நிறுத்தம், சிறப்பு கட்டண பேருந்து ஆகியவை மூலம் இந்து சமய அறநிலைத் துறை பல கோடி ரூபா வருமானத்தை மட்டும் ஈட்டியது. ஏழை, எளிய முருக பக்தர்களிடம் சிறப்பு பேருந்து கட்டணம் என நடந்த கட்டண கொள்ளை முருக பக்தர்களை மிகப் பெரிய அளவில் பாதிப்படைய செய்தது.

இவ்வாறு வருமானத்தை ஈட்டிய இந்து சமய அறநிலையத் துறையும், தமிழக அரசும் பாதயாத்திரை செல்லும் வழியிலும் தரிசனத்துக்கு காத்திருக்கும் பக்தர்களுக்கும் அடிப்படை வசதிகளான கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி போன்ற சாதாரண வசதிகளையும் கூட செய்து தரவில்லை. தொடர்ந்து திமுக இந்து விரோத அரசு என்பதை நொடிக்கு ஒரு முறை நிரூபித்து வருகிறது.

பக்தர்களை அவதிக்குள்ளாக்கினால் ஏழ்மையான பக்தர்கள் கோயிலுக்கு வர மாட்டார்கள் என்று இந்த அரசு நினைக்கின்றது. அதன் காரணமாகவே பக்தர்களை சிரமத்திற்கு உள்ளாக்குகிறதோ என்கின்ற சந்தேகம் தமிழகத்தில் உள்ள முருக பக்தர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கட்டணமின்றி செய்யக் கூடிய அடிப்படை வசதிகளை செய்ய தவறியதோடு பக்தர்கள் பணம் கொடுத்து வாங்கும் பஞ்சாமிர்த பிரசாதம் கூட தட்டுப்பாடு காரணத்தினால் பழநி மற்றும் அறுபடை வீடுகளில் பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள்.

பல கோடி பேர் கோயிலுக்கு வருவார்கள் என்று திருக்கோயில் தேவஸ்தானத்துக்கும் தமிழக அரசுக்கும் முன்கூட்டியே தெரியும். அவர்களுக்கு தேவையான அளவு பிரசாதம் தயார் செய்து வைக்க வேண்டிய இந்து சமய அறநிலையத் துறை வேண்டுமென்றே கண்டுகொள்ளாமல் இருந்த காரணத்தினால் பழநியில் பஞ்சாமிர்தம் கிடைக்கவில்லை மற்ற கோயில்களில் நெய்வேத்திய பிரசாதம் கிடைக்கவில்லை. இந்த சம்பவம் இந்து சமய அறநிலையத் துறைக்கு மிகப்பெரிய இழுக்கு ஆகும். இது போன்ற நிர்வாக திறமையற்ற இந்து சமய அறநிலையத் துறை இந்து கோயிலை விட்டு வெளியேறுவதே இது போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வாகும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# கிவ் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்; ஒருவர் பலி!

உக்ரைன் தலைநகர் கிவ் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நால்வர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர்களில் ஒன்பது வயது சிறுமியும் அடங்குவார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ரஷ்யாவினால் ஏழு ஏவுகணைகள் மற்றும் 71 ஆளில்லா விமானங்கள் ஏவப்பட்டன குறிப்பிடப்பட்டுள்ளது.

அவற்றுள் 6 ஏவுகணைகளுக்கு பதில் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனால் மூன்று மில்லியன் மக்கள் வசிக்கும் நகரத்தில் தீ பரவல் ஏற்பட்டதுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# கைதிகளை விடுவிக்குமாறு ஹமாஸிடம் ஐ.நா. பொதுச்செயலாளர் வேண்டுகோள்

ஹமாஸ் அமைப்பு அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டாரெஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பு எதிர்வரும் சனிக்கிழமை அனைத்து பணய கைதிகளையும் விடுவிக்காவிட்டால் காசாவில் போர் வெடிக்கும் எனும் அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துக்குப் பதிலளிக்கும் போதே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல், ஹமாஸ் இடையிலான போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் அமைப்பினர் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய



பணய கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டனர்.

இஸ்ரேல் தங்கள் நாட்டுச் சிறைகளில் உள்ள பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்வதற்கு இணக்கம் தெரிவித்தது.

சனிக்கிழமை அனைத்து பணய கைதிகளையும் ஹமாஸ் விடுதலை செய்யாவிட்டால் காசாவில் போர் வெடுக்கும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் காசாவில் மீண்டும் ஒரு பெரிய சோகத்திற்கு வழிவகுக்கும் விரோதப் போக்கைத் தாம் தவிர்க்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அண்டோனியோ குட்டாரெஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், ஹமாஸ் அமைப்பினர் அடுத்த சனிக்கிழமை பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இரு தரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் தங்கள் உறுதிமொழிகளை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும், பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கிரீஸின் புதிய ஜனாதிபதியாக முன்னாள் சபாநாயகர் தேர்வு

கிரீஸின் நாடாளுமன்றம் அதன் முன்னாள் சபாநாயகர் கான்ஸ்டன்டைன் டசௌலாஸை நேற்று புதன்கிழமை நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தது.

2023 ஆம் ஆண்டு நடந்த ஒரு கொடிய ரயில் விபத்துக்கு நீதி கோரி கடந்த மாதம் நாடாளுமன்றத்திற்கு வெளியே திரண்ட போராட்டக்காரர்களை அவரை பரிந்துரைக்கும் முடிவு கோபப்படுத்தியுள்ளது.

நாடாளுமன்ற சபாநாயகராக டசௌலாஸ் இருந்தபோது, கிரேக்கத்தின் மிக மோசமான ரயில் பேரழிவுக்கான எந்தவொரு அரசியல் பொறுப்பையும் சட்டமன்ற உறுப்பினர்கள் விசாரிக்கத் தவறிவிட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.



இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், நீதித்துறை விசாரணை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. கிரேக்க சட்டத்தின் கீழ் அரசியல்வாதிகளை விசாரிக்கக்கூடிய ஒரே அமைப்பு நாடாளுமன்றம் மட்டுமே.

66 வயதான டசோலாஸ் 2000 ஆம் ஆண்டு முதல் சட்டமன்ற உறுப்பினராகவும், முன்னர் கிரேக்கத்தின் கலாச்சார அமைச்சராகவும், துணைப் பாதுகாப்பு அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற வாக்கெடுப்பில், 300 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 160 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றார்.

கிரேக்கத்தின் முதல் பெண் ஜனாதிபதியான கேடரினா சகெல்லரோபௌலூவின் ஐந்தாண்டு பதவிக்காலம் மார்ச் மாதத்தில் முடிவடைகிறது.

அவருக்குப் பின்னர் டசோலாஸ் ஜனாதிபதியாக பதவியேற்பார்.

# கோர விபத்தில் ஒருவர் மரணம்!



(ராமு தனராஜா)

பதுளை – பண்டாரவளை வீதியில் ஹால்பே எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு அருகில் நேற்று பிற்பகல் மோட்டார் சைக்கிள் ஒன்றும் லொறி ஒன்றும் மோதியதில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லவாய, கல்போக்க, பெரகெட்டியவைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்

மேற்படி நபர் பதுளையில் இருந்து பண்டாரவளை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறி மோதியதில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி, அருகிலுள்ள தொலைபேசிக் கம்பத்தில் மோதியதால், கம்பம் சரிந்து வீழ்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் சாரதி எல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தெமோதர வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






# இன்றைய ராசி பலன்கள் - 13.02.2025




இன்று மகிழ்ச்சியான மனநிலையை வளர்த்துக்கொள்வது முக்கியம். கவலைப்படுவதையும் உணர்ச்சி வசப்படுதலையும் இன்று தவிர்க்க வேண்டும்.

இன்று வேலைப் பளு அதிகமாகக் காணப்படும். பணிகளில் திட்டமிடல் அவசியம். உண்மையான உழைப்பு வெற்றியைப் பெற்றுத் தரும்.

உணர்ச்சி வசப்படுதலை தவிர்ப்பதன் மூலம் உறவில் பாதிப்புகளை தவிர்க்கலாம். நட்பு முறையுடன் பழகினால் நல்ல புரிந்துணரவு வளரும்.

பணவரவு அதிகமாக காணப்படும். இன்று தேவையில்லாத செலவினங்களும் ஏற்படலாம். எனவே உங்களால் செலவை கட்டுப்படுத்த இயலாது.

உங்கள் துணையாரின் உடல் நிலை பற்றிய கவலைகள் ஏற்படலாம்.




மன அழுத்தத்தை விரட்ட உற்சாகத்தை கடைப் பிடிக்க வேண்டிய நாள். இன்று கவனக்குறைவு ஏற்படலாம். எதையும் எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணியிட அழுத்தம் காரணமாக பணியில் தொய்வு ஏற்படலாம். பொறுமையை கடைபிடிப்பதன் மூலம் திறமையாக பணிகளை கையாளலாம்.

நட்புடன் பழகுவதன் மூலம் துணையாருடன் நல்லுறவு மேம்படும். அவரின் விருப்பப்படி செயல்படுவதன் மூலம் சந்தோஷம் கிட்டும்.

இன்று பணவரவு திருப்திகரமாக இல்லை. கூடுதல் செலவினங்கள் கவலையை ஏற்படுத்தும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளுமையான உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். நீங்கள் செய்யும் செயலை சரியாக முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் சரியானதாக இருக்கும்.

இன்று வேலையில் முன்னேற்றம் காணப்படுகின்றது. உங்களின் தனிப்பட்ட திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை பேச்சால் உங்கள் துணையாரை கவர்வீர்கள். ஆதனால் அன்யோன்யம் பெருகும்.

இன்று பணவரவு உற்சாகத்தைத் தரும். அதிக பணவரவால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக உள்ளது. ஆரோக்கியமான மன நிலையால் உங்கள் உடல் நிலை நன்கு பராமரிக்கப்படும்.




இன்று நீங்கள் புதிய முயற்சிகளில் இறங்கலாம். முன்னேற்றமும் திருப்தியும் நிறைந்த நாளாக அமையும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

இன்று பணியிடத்தில் அமைதி நிலவும். உற்சாகத்துடனும் உடனுக்குடனும் வேலை செய்வீர்கள். அதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் வெளியிடங்களுக்குச் செல்வீர்கள்.

இன்று பணவரவு காணப்படும். பணவரவு உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் சந்தோஷமான மனநிலை உங்களுக்கு ஆரோக்கியத்தை பெற்றுத் தரும். இன்று உங்கள் உடல் நிலையில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று யதார்த்தமாக செயல்பட வேண்டிய நாள். பெரிய எதிர்பார்ப்புகளுடன் செயலாற்றாதீர்கள். ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

இன்று அதிக பணிச்சுமை காரணமாக பணியை திறம்பட செய்வதில் சில தடைகள் இருக்கும்.

கணவன் மனைவி இடையே உணர்ச்சி வசப்படாமல் செயலாற்ற வேண்டும். அதன் மூலம் நல்லுறவையும் மகிழ்ச்சியையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று கூடுதலாக செலவு செய்ய நேரிடலாம். எனவே இன்று செலவுகளை சமாளிப்பதில் சிறிது கஷ்டம் இருக்கும்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இல்லலை. மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் கவலைகளால் பாதிக்கப்படும் நாள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் நீங்கள் உணர்ச்சி வசப்படாமல் இருந்து அமைதி பெறலாம்.

சவால்களை எதிர்கொள்ளும் நாள். இன்று ஓய்வின்றி உழைக்க வேண்டியிருக்கும். நன்கு பணியாற்ற அட்டவணை அமைத்து பணியாற்றுங்கள்.

உங்கள் துணையாரிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதை தவிர்ப்பதன் மூலம நல்லுறவை வளர்க்கலாம்.

இன்று வீட்டுத் தேவைகளுக்காக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும். தேவைகள் அதிகரிக்கும். அதனால் செலவும் அதிகரிக்கும்.

தாயாரின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரிடும் அதனால் கூடுதல் செலவுகள் நேரலாம்.




இன்று உங்கள் முயற்சிகள் வெற்றியடையும் நாள். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். உங்கள் மனது நிறைந்திருக்கும் நாள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணிவான மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையாரை சந்தோஷப்படுத்துவீர்கள். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் பெருகும்.

பணவரவு திருப்திகரமாக அமையும். உங்கள் கடின உழைப்புக்கான போனஸ் அல்லது ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




இன்று உங்கள் மனதில் நம்பிக்கை நிறைந்திருக்கும். இன்றைய நாளில் நீங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். இன்று மேற்கொண்ட காரியங்கள் அனைத்தும் எளிதாக நடக்கும்.

மேற்கொண்ட பணிகளை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை எளிதாகச் செய்ய இயலும்.

உங்கள் துணையுடன் சந்தோஷமான தருணங்களை பகிரந்து கொள்வீர்கள். குடும்பத்தில் நடக்கவிருக்கும் ஒரு விஷேத்தைப் பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராத வகையில் பணவரவு கிடைக்கும்.

இன்றைய நாள் ஆரோக்கியமான நாளாக உங்களுக்கு அமையும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.02.2025




இன்று சில அசௌகரியங்கள் ஏற்படலாம். பொறுமையும் நேர்மறை எண்ணங்களும் இருந்தால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். திறமையாகச் செயல்பட அட்டவணையிட்டு திட்டமிடல் அவசியம்.

குடும்ப விஷயங்கள் காரணமாக கணவன் மனைவிக்குள் சச்சரவு ஏற்படும். எனினும் உங்கள் சரியான அனுகுமுறை மூலம் அதை தடுக்கலாம்.

கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம். உங்கள் தேவைகளை சந்திக்க சிறு கடன்களை வாங்க நேரிடலாம்.

தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்கலாம்.




இன்று மகிழ்ச்சியான மன நிலை இருக்கும். உங்கள் குறிக்கோள்களை நிறைவேற்றுவீர்கள் முக்கியமான முடிவுகள் எடுப்பதன் மூலம் நன்மை கிட்டும். நீங்கள் வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள்.

உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள். உங்கள் மேலதிகாரியிடமிருந்து பாராட்டுக்களை பெறுவதற்கான நல்ல வாய்ப்பு இன்று அமைந்துள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். நல்ல புரிந்துணர்வின் மூலம் நல்லுறவை வலுப்படுத்தலாம்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். நீங்கள் நன்கு பணம் சம்பாதிக்க இன்றைய நாள் மிகவும் அதிர்ஷ்டமான நாள்.

இன்று ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




இன்று யதார்த்தமாக இருக்க வேண்டிய நாள். உங்கள் காரியங்களை மேற்கொள்வதில் சில தடைகள் நேரலாம்.

அனுசரித்து போவதன் மூலம் திறம்பட பணியாற்ற முடியும். நன்கு திட்டமிட்டு செயல்பட்டால் உங்கள் திறமை அதிகரிக்கும்.

கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு இருக்கும். அது நல்லுறவை பாதிக்கும்

நிதிநிலைமை கவலை தரும் வகையில் இருக்கும். தேவையற்ற செலவுகள் குடும்பத்தில் ஏற்படும்.

உங்கள் உணவில் கவனமாக இருக்க வேண்டும். உணவு ஒவ்வாமை ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் உங்களுக்கு மிதமான பலன்களையே தரும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். இன்று நண்பர்கள் கூட உங்கள் விரோதிகளாக மாற வாய்ப்புண்டு.

இன்று கடமைகள் அதிகமாக காணப்படும். ஓய்வின்றி உழைக்க நேரலாம்.சிறந்த முறையில் பணியாற்ற நல்ல உத்தியைக் கையாளுங்கள்.

உங்கள் பாதுகாப்பு நிலைமை பற்றி உங்கள் துணையாருடன் விவாதிக்காதீர்கள். அதனால் உறவு பாதிக்கப்படும். மேலும் கருத்து வேறுபாடுகள் உருவாகலாம்.

இன்று பண வரவும் செலவும் கலந்து காணப்படுகின்றது. பணத்தை மிச்சப்படுத்திச் சேமிக்க வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் கால் வலியால் பாதிக்கப்படலாம்.

# வாகரை புத்தங்கேணி கடலில் கரை ஒதுங்கிய ‘போயா’ மீட்பு!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள புத்தங்கேணி கடற்கரையில் நேற்றுப் புதன்கிழமை கரை ஒதுங்கிய போயா என அழைக்கப்படும் பாரிய தாங்கி ஒன்றைத் தாங்கள் மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாரிய போயா ஒன்று மிதந்து கரையொதுங்குவதை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் அதனை இழுத்து கரைசேர்த்துள்ளனர். அதனை மீட்டுள்ளனர் எனப் பொலிஸெ தெரிவித்தனர்.

அண்மைகாலமாக இவ்வாறான போயாக்கள் கிழக்கு கடற்கரைகளில் ஒதுங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

